**மீரிகம பிரதேச சபை - 2020**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீரிகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மீரிகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.
1.3(அ), 1.3(ஆ)(ii), 1.3(ஆ)(iii)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 139,537,708 தொகையான மூலதன மானியங்களில் ஆண்டிற்குரிய பெறுமதியான ரூபா 13,953,771 தொகை நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்தின் கையளிப்பு கணக்கில் மாற்றப்படாமையின் காரணமாக விரிவான வருமானக்கூற்றில் மிகை | 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன மானியங்களுக்குரியதாக வருடாந்தம் இனங்காணப்படுகின்ற பெறுமானத்தேய்வின் அளவு 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்தான கையளித்தல் கணக்கிற்கு மாற்றி வருமானமொன்றில் பதியப்பட | மூலதன மானியங்களை நியமத்தின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டியிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய LGD/09/2019/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன. | | |
| (i) | மோட்டார் வாகனமும் வண்டியும் மீள் இனங்காணலின் போது மோட்டார் வாகனம், வண்டி என சொத்து தொகுதிகள் இரண்டிற்கு வகைப்படுத்தப்பட்டு மோட்டார் வாகனங்கள் 4 சதவீதமும், வண்டிகள் 20 சதவீதமும் ஆக தனித்தனியாக பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 42,091,910 தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் 4 சதவீதம் படி ரூபா 1,683,676 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு மற்றும் உரிய சொத்துக்களின் பெறுமதிகள் நாட்குறிப்பு பதிவுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டின் போதும் சீராக்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியான பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு சரியான பெறுமானத்தேய்வு வீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் என ரூபா 159,482,630 மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளாக ரூபா 23,665,106 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. சபையின் பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்காக 10 சதவீத பெறுமானத்தேய்வு | 2021 ஆம் ஆண்டு முதல் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பெறுமானத்தேய்வு செய்யும் போது குறித்துரைத்த பெறுமானத்தேய்வு விகிதம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான சொத்துத் தொகுதிகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீதமொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பெறுமானத்தேய்வு விகிதம் காண்பிக்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரமும் அவ்வாறான சொத்து தொகுதியொன்று இனங்காணப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | இரண்டு கணனி மென்பொருள் முறைமைகளை மூலதனமாக்கும் போது ரூபா 295,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் ஊடாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் சரியான பெறுமதியை இனங்கண்டு மூலதனமாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2020 இற்காக மீரிகம பிரதேச செயலகத்திலிருந்து நிர்வாக செலவினமாக கிடைக்கவேண்டிய ரூபா 512,542 வருமானமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக விரிவான வருமானக் கூற்றில் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் ஊடாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய வருமானம் யாவற்றையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,360 தொகையான முத்திரை மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | உரிய கணக்கு மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுப்பெறுமதி ரூபா 297,207,257 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் | பட்டோலைகளின் மீதி சரியானதாகும். தற்போது பதிவேட்டில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் | கணக்குகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 34,338,588 வேறுபாடொன்று காணப்பட்டது. | அவற்றிலிருந்து பெறப்பட்ட பட்டோலைகள் சரியாக இருந்த போதும், கணக்குகளில் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மீதி பிழையானதாகும். அந்த கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிய முடியாமையினால் கணக்குகளில் பெறுமதியை சரிசெய்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். | எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,785,841 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்களுக்குரிய கணக்காய்விற்கான கையளித்தல் கட்டளை மற்றும் உரித்துறுதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆவணப்படுத்தப் பட்ட சான்றுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 65,540,331 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 33,023,119 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 இன் பிரகாரம் ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மதிப்பீடு செய்யப்பட | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கும், ஆதனவரி மதிப்பீட்டை மேற்கொண்டு சேகரிக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கும், நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கும் |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் ஆதனவரி மதிப்பீடு இறுதி தடவையாக 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,103,817 தொகையான ஆதனவரி நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.2 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 85 வாடகைக் கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை கடை வாடகை மீதி ரூபா 6,877,450 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாத கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். நிலுவை கடை வாடகையின் ஒரு பகுதியை பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்த நிலுவை அகற்றப்பட்டு எஞ்சிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையை கைச்சாத்திடு வதற்கும், நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |